வரலாறு என்பது கடந்த காலத்தில் உண்மையாக நடந்த நிகழ்வுகளாகும். வரலாற்று நிகழ்வுகளை எளிதில் விளங்கிக் கொள்ள வரலாற்றின் பொருளை அறிந்திருப்பது அவசியம் ஆகும். வரலாற்று அறிஞர்கள் வரலாற்றின் பொருளைக் குறித்துத் தத்தம் கருத்துகளைக் கூறியுள்ளனர்.

- **ஹெரோடொட்டூஸ்** - வரலாறு என்பது மனிதர்களின் செயல்பாடுகளையும் அவர்கள் அவ்வாறு செயல்பட்டதற்கான காரணங்களையும் விளக்கும் கதைகளாகும்.
- **இப்னு கல்டுன்** - வரலாறு மனிதனின் நாகரிகத்தையும் அதனால் ஏற்பட்ட மாற்றங்களையும் விவாதிக்கின்றது.
- **இ.எச்.கார்** - வரலாறு என்பது தற்காலத்திற்கும் கடந்த காலத்திற்கும் இடையிலான தொடர்புச் செயற்பாங்காகும்.
- **முனைவர் முகமது யூசோப் பின் இப்ராஹிம்** - வரலாறு என்பது கடந்த கால நிகழ்வு ஒன்றின் குறிப்பு அல்லது பதிவு ஆகும்.
- **நிறைநிலைப் பேராசிரியர் டான் , டாக்டர் கூ கேய் கிம்** - வரலாறு நடந்த அல்லது முடிந்த நிகழ்வைக் குறிக்கிறது.

கடந்த காலத்தில் நிகழ்ந்த மனிதனின் செயல், மாற்றம், குறிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதே வரலாறு. வரலாறு மனித வாழ்விற்குப் படிப்பினையையும் வழிகாட்டுதலையும் வழங்குகிறது.

1. வரலாறு என்பது கடந்த காலத்தில் ______________________ நடந்த நிகழ்வுகளாகும்.

2. ______________________________ என்பவர் வரலாறு மனிதனின் நாகரிகத்தையும் அதனால் ஏற்பட்ட மாற்றங்களையும் விவாதிக்கின்றது என்று கூறியுள்ளார்.

3. நிறைநிலைப் பேராசிரியர் டான் , டாக்டர் கூ கேய் கிம் என்பவர் வரலாறு என்பது கடந்த கால நிகழ்வு ஒன்றின் ______________________________ அல்லது பதிவு ஆகும் எனக் குறிப்பிடுகின்றார்.

4. கடந்த காலத்தில் நிகழ்ந்த மனிதனின் __________________, மாற்றம், குறிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதே வரலாறு.

5. வரலாறு மனித வாழ்விற்குப் படிப்பினையையும் ______________________ வழங்குகிறது.

| | |
|---|---|
| **உண்மையாக** | **வழிகாட்டுதலையும்** |

| | | |
|---|---|---|
| **செயல்,** | **இப்னு கல்டுன்** | **குறிப்பு** |